# தெருநாய்களுக்கு உணவளித்தல்

**பின்னணி**:

தெரு நாய்களுக்கு உணவளிப்பது ஒரு இரக்கச் செயல். இருப்பினும், தொடர்ந்து உணவளிப்பது, அவ்வாறு அளிப்பவருக்கு தெரியாத சில பிரச்சனைகளை உருவாக்கலாம். இது தெரு நாய்களைச் சார்ந்திருக்கச் செய்து, அவற்றின் இயற்கையான உணவு தேடும் திறன்களைக் குறைக்கும். அது அவர்களை விரும்பாதவர்கள் உட்பட பல்வேறு நபர்களுடன் பழகும் திறனை எதிர்மறையாக பாதிக்கும். மேலும், இது குரைப்பது அல்லது விரட்டுவது போன்ற பிராந்திய மற்றும் பாச நடத்தைகளுக்கு வழிவகுக்கும். இந்த பிரச்சினைகள் மக்களுக்கு இடையிலான மோதல்களை அதிகரிக்கும், தெரு நாய்களின் பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்தும். திட்டமிட்ட/மாற்றியமைக்கப்பட்ட உணவளிக்கும் முறைகள் தெரு நாய்களின் நல்வாழ்வை உறுதி செய்வதோடு, மக்களுக்கும் நாய்களுக்கும் இடையே நல்லிணக்கத்தை வளர்க்கும்.

| தொடர்ந்து உணவளிப்பதன் நன்மைகள் | தொடர்ந்து உணவளிப்பதன் தீமைகள் |
|---|---|
| • தெரு நாய்களுக்கு கூடுதல் உணவு ஆதாரம்.<br>• தெரு நாய்களுக்கும் மக்களுக்கும் இடையே சமூக உறவுகள்.<br>• உணவளிப்பவர்களுக்கு மனநிறைவு. | • சார்புத்தன்மையை ஊக்குவிக்கிறது, இயற்கையாக உணவு தேடும் திறனைக் குறைக்கிறது.<br>• தெரு திறன்களையும், பல்வேறு வகையான நபர்களுடன் பழகும் திறனையும் குறைக்கிறது, இதனால் மனித-நாய் மோதல்கள் ஏற்படுகின்றன.<br>• பிராந்திய மற்றும் பாச நடத்தைகளுக்கு வழிவகுக்கிறது, இதனால் குரைப்பது மற்றும் விரட்டுவது போன்ற செயல்கள் ஏற்படுகின்றன.<br>• கூட்டமாக கூடுவதை ஊக்குவிக்கிறது, நாய்ச் சண்டைகள் மற்றும் தொல்லை புகார்களை அதிகரிக்கிறது.<br>• தெரு நாய்களை வெறுப்பவர்களிடமிருந்து பகைமையை ஈர்க்கிறது, இதனால் தீங்கு அல்லது இடமாற்றம், ஏன் கொல்லப்படுவது கூட நிகழலாம்.<br>• பொது இடங்களில் அனைத்து உணவளித்தலையும் தடை செய்தல் மற்றும் தெரு நாய்களை ஒழித்தல்/ABC விதிகளை ரத்து செய்யக் கோரி பல நீதிமன்ற வழக்குகளை உருவாக்கியுள்ளது. |

மேலும் தகவலக்கு அணுகவேண்டிய வலைப்பகம்:
ROH-Indies, University of Edinburgh: www.rohindies.org

## தெரு நாய்களுக்கு திட்டமாய் உணவளித்தல்: ஓர் பாதுகாப்பான அணுகுமுறை

திட்டமிட்ட உணவளித்தல், தெரு நாய்களுக்கு ஆதரவளித்து அதே சமயம், சார்புத்தன்மை, மோதல்கள் மற்றும் தீங்கு விளைவிப்பதை குறைக்கிறது. இந்த அணுகுமுறைகளை பின்பற்றுவதன் மூலம் நாய்களின் நல்வாழ்வையும், சமூக சகவாழ்வையும் நிலைநாட்டலாம்.

1. **தேவைப்படும்போது மட்டும் உணவளிக்கவும்:**
    - நோய்வாய்ப்பட்ட, வயதான, பாலூட்டும் அல்லது பட்டினியால் வாடும் நாய்கள் மற்றும் ஆதரவற்ற விலங்குகளுக்கு மட்டும் உணவளிக்கவும். ஆரோக்கியமான நாய்கள் தங்களுக்கு தேவையான உணவை தாங்களே தேடிக்கொள்ளும். உணவை தேடுவது நாயின் நல்வாழ்வுக்கு முக்கியமானது.
2. **தொடர்ந்து உணவளிப்பதை மேலும் முழுமையாக உணவளிப்பதை தவிர்க்கவும்:**
    - சார்புத்தன்மையை தடுக்கவும், இயற்கையான உணவு தேடும் திறன்களை பாதுகாக்கவும், அவ்வப்போது சிறிய அளவில் உணவளிக்கவும். தொடர்ந்து உணவளிப்பது அவர்களின் இயற்கையான உணவு தேடும் திறன்களைக் குறைக்கும், அவர்களை சில நபர்களை மட்டுமே சார்ந்திருக்கச் செய்து, மற்றவர்களுடன் பாதுகாப்பாக பழக முடியாத நிலைக்கு தள்ளும். இது குரைப்பது, விரட்டுவது மற்றும் பிராந்திய ஆக்கிரமிப்பு போன்ற மோதல் நடத்தைகளுக்கு வழிவகுக்கிறது. எப்போதாவது, சிறிய அளவில் உணவளிப்பதன் மூலம் நாய்கள் சுயசார்புடன் இருந்து, அவற்றின் சூழலுடன் சிறப்பாக ஒன்றிணைகின்றன.
3. **கூட்டமாக கூடுவதை தவிர்க்கவும்:**
    - சண்டைகள் மற்றும் சமூக புகார்களை குறைக்க, உணவளிக்கும் இடங்களை பரவலாக அமைக்கவும். நாய்கள் கூட்டமாக கூடினாலோ அல்லது விரட்டுவது/குரைப்பது போன்ற விரும்பத்தகாத நடத்தைகளை வெளிப்படுத்தினாலோ, தற்காலிகமாக உணவளிப்பதை நிறுத்தவும்.
    - 

மேலும் தகவலக்கு அணுகவேண்டிய வலைப்பகம்:
ROH-Indies, University of Edinburgh: www.rohindies.org

4. **கண்படாத வகையில் உணவளிக்கவும்: இடம் மற்றும் காலத்தை ஆராய்ந்து தேர்வுசெய்யவும்**

  - புகார்களை தவிர்க்க, அமைதியான நேரங்களில் மற்றும் பரபரப்பான பகுதிகளில் இருந்து விலகி உணவளிக்கவும்.

5. **சுத்தம் செய்யவும்:**

  - மீதமுள்ள உணவுகள் மற்றும் கழிவுகளை அகற்றி, தூய்மையையும் சமூக நல்லெண்ணத்தையும் பராமரிக்கவும்.

6. **சார்புத்தன்மையை படிப்படியாக குறைக்கவும்:**

  - நாய்கள் தொடர்ந்து உணவளிப்பதை நம்பியிருந்தால், அவற்றின் உணவு தேடும் திறன் மற்றும் உடல்நலத்தை கண்காணிக்கும்போது, உணவு அளவையும் நிகழ்வையும் படிப்படியாக குறைக்கவும்.

7. **தெரு நாய்களை செல்லப்பிராணிகளைப் போல் நடத்தாதீர்கள்:**

  - தெரு நாய்களை செல்லப்பிராணிகளைப் போல் நடத்துவது மோதல் நடத்தைகளுக்கு வழிவகுக்கும் மற்றும் அவர்களுக்கு நேர்மாறான விளைவுகளை ஏற்படுத்தும்.

8. **உணவளிக்கும் நடைமுறைகளை சச்சரவு குறைவதர்க்கேற்ப மாற்றியமைக்கவும்:**

  - நாய்கள் மக்களை துரத்தவோ, குரைக்கவோ அல்லது கும்பலாக தாக்கவோ தொடங்கினால், உணவளிப்பதை நிறுத்தி அல்லது மாற்றியமைத்து, தெரு நாய்களை முழுமையாக புறக்கணிக்கவும்.

9. **சமூகத்துடன் ஈடுபடவும்:**

  - மோதல்களை தீர்க்க, புகார்களை ஒத்துழைப்புடன் நிவர்த்தி செய்யவும்.

10. **தவறாமல் தடுப்பூசி போடவும்:**

  - குறிப்பாக ரேபிஸ் (வெறிநாய் கடி) எதிராக நாய்களுக்கு தவறாமல் தடுப்பூசி போடப்படுவதை உறுதிப்படுத்தவும்.

11. **குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யவும்:**

   - தெரு நாய்களுக்கு உணவை விட குடிநீர் கிடைப்பது மிகவும் கடினம். குறிப்பாக கிபிள் போன்ற உலர்ந்த உணவை கொடுக்கும்போது, உணவுடன் சுத்தமான குடிநீரையும் வழங்குவது அவசியம். தண்ணீர் தொட்டிகளை சுத்தமாக வைத்து, தவறாமல் நிரப்பவும். கொசுக்கள் உற்பத்தியாவதை பற்றிய கவலைகளை முன்கூட்டியே தவிர்க்க, நகராட்சி அதிகாரிகளுடனும் மற்றும் குடியிருப்போர் நல சங்கங்களுடனும் தொடர்பு கொள்ளுங்கள்.

12. **தெரு நாய்கள் மற்றும் உணவளிப்பது பற்றிய தற்போதைய சட்டங்களை மட்டும் நம்ப வேண்டாம்:**

   - தெரு நாய்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் கேள்விக் குள்ளாக்கப்படலாம். சமூக நல்லெண்ணத்தை உறுதிப்படுத்துவது நாய்களின் பாதுகாப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளுதலை உறுதி செய்வதற்கு ஈடாகும்.